RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 272 | அக்டோபர்.3 2025 வெள்ளிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## “தமிழகம் தலைகுனிந்து நிற்கிறது” கரூர் சம்பவத்தில் ஸ்டாலின் மீது பழனிசாமி சாடல்

தருமபுரி: அக்.3-

“தமிழகத்தை தலைகுனிய விடமாட்டேன் என்று முதல்வர் ஸ்டாலின் சொன்னார். ஆனால், இன்று தலைகுனிந்து நிற்கும் காட்சியைப் பார்க்கிறோம். நாடே அதிர்ந்துவிட்டது” என்று கரூர் நெரிசல் சம்பவம் குறித்து தேர்தல் பிரச்சாரத்தில் அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி பேசினார்.

தருமபுரியில் இன்று (அக்.2) மேற்கொண்ட பிரச்சாரத்தில் அவர் பேசியது: “கரூரில் செப்டம்பர் 27ம் நடந்த சம்பவத்தை நீங்களும் பார்த்திருப்பீர்கள். இந்த ஆட்சியாளர்கள் உரிய முறையில் பாதுகாப்பு கொடுத்திருந்தால் அந்த உயிர்களை பாதுகாத்திருக்கலாம். முறையான, சரியான பாதுகாப்பு இல்லாத காரணத்தினால் பெண்கள், குழந்தைகள் உட்பட 41 பேர் இறந்திருக்கிறார்கள். இதற்கெல்லாம் காரணம் யார்? இது மக்கள் கேட்கும் குரல்.

ஆளுங்கட்சிக்கு ஒரு நீதி, எதிர்க்கட்சிகளுக்கு ஒரு நீதியா? நாட்டு மக்களைக் காப்பாற்றும் பொறுப்பு அரசுக்கு இருக்கிறது. போராட்டம், ஆர்ப்பாட்டம், பொதுக்கூட்டம், பேரணி இதுக்கெல்லாம் பாதுகாப்புக் கொடுப்பது அரசின் கடமை. முதல்வரின் கையில்தான் காவல் துறை இருக்கிறது. சரியான முறையில் முதல்வர் உத்தரவிட்டிருந்தால், காவல் துறை சரியான முறையில் செயல்பட்டிருந்தால் பாதுகாப்புக் கொடுக்கப்பட்டிருந்தால், 41 உயிரை இழந்திருக்க வேண்டியதில்லை.

இன்னும் ஆழமாகப் பேசமுடியும். ஆனால் இந்த அரசாங்கம் ஒரு நபர் கமிஷன் அமைத்துள்ளனர், விசாரணை தொடங்கிவிட்டது. அதனால் மேலோட்டமாகத்தான் பேச முடியும். இவ்வளவு பிரச்சினை நடந்துவிட்டது. தமிழகத்தை தலைகுனிய விடமாட்டேன் என்று முதல்வர் ஸ்டாலின் சொன்னார். ஆனால் இன்று தலைகுனிந்து நிற்கும் காட்சியைப் பார்க்கிறோம். நாடே அதிர்ந்துவிட்டது.

இதுவரை எத்தனையோ அரசியல் கட்சிகள் பொதுக் கூட்டம் நடத்தியிருக்கிறது. எந்த ஒரு பொதுக்கூட்டத்திலும் இல்லாத அளவுக்கு 41 உயிர்கள் பறி போயிருக்கிறது என்று சொன்னால், இந்த அரசாங்கம் தான் பொறுப்பேற்க வேண்டும். ஆட்சி உங்கள் கையில் இருக்கிறது, ஆட்சியாளர்களைத்தான் கேட்க முடியும். யார் யார் மீதோ பழி சுமத்தி தப்பிக்கக் கூடாது. ஓர் அரசு எப்படி செயல்பட வேண்டும் என்பதை அறிந்துகொள்ள வேண்டும். இனியாவது பொதுக்கூட்டத்துக்கு முறையான பாதுகாப்பு தருவீர்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

நான் 163 தொகுதியில் மக்களை சந்தித்தேன், 5 முதல் 6 மாவட்டத்தில் தான் காவல் துறை பாதுகாப்பு கொடுத்தனர், மற்ற இடங்களில் நம்முடைய அதிமுக தொண்டர்கள், கூட்டணிக் கட்சித் தொண்டர்கள் தான் பாதுகாப்பு கொடுத்தனர்.

ஆளுங்கட்சி முதல்வர் கூட்டம் நடத்தினால், ஆளே இல்லாத பகுதியில்கூட காவலர்களை நிறுத்தி பாதுகாப்பு கொடுக்கிறீர்கள். அதை நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆளே இல்லாத இடத்தில் பாதுகாப்புக் கொடுக்கும் முதலமைச்சர், ஆயிரக்கணக்கான பேர் இருக்கும் இடத்தில் ஏன் பாதுகாப்பு கொடுக்கவில்லை என்று மக்கள் கேட்கும் கேள்விக்கு முதல்வர் பதில் சொல்லியாக வேண்டும். இதற்கெல்லாம் பதில்



சொல்வதற்கு மக்கள் 2026 தேர்தலை எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள், உங்களுக்குத் தகுந்த பதிலடி வழங்குவார்கள்.

அதுமட்டுமல்ல, ஸ்டாலின் மாடல் அரசு உயர் அதிகாரிகளை, செய்தியாளர்களை சந்தித்து இந்த ஆட்சியின் திட்டங்களைச் சொல்ல வேண்டும் என்று பணித்து, இந்த 10 நாட்களாக இந்த ஆட்சியில் என்னென்ன திட்டங்கள் என்று சொல்லி வருகிறார்கள். அது சொல்லலாம், ஆனால் கரூரில் நடந்த சம்பவத்தை எப்படி அரசு செயலாளர் சொல்ல முடியும்?

ஒருநபர் கமிஷன் அமைத்துவிட்டு அரசு செயலாளர்களை வைத்து அரசியல் செய்ய வேண்டாம். உங்கள் துறையின் பணிகளை மட்டும் நீங்கள் செய்ய வேண்டும். அதை விட்டுவிட்டு அவர் எப்போது அங்கு சென்றார். இவர் ஏன் கையைக் காட்டவில்லை என்பதெல்லாம் உங்களுடைய பேச்சாக இருக்கக் கூடாது. இதெல்லாம் அதிமுக ஆட்சிக்கு வந்த பிறகு தோண்டியெடுத்து தவறான செயலில் ஈடுபடுகின்ற அதிகாரிகளை விடமாட்டேன்.

என்ன நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? மக்களின் வரிப்பணத்தில் தான் உங்களுக்கு சம்பளம் வழங்கப்படுகிறது. எனவே, நடுநிலையோடு நடந்துகொள்ள வேண்டும். இன்றைக்கு மக்கள் துயரத்தை எண்ணி துடித்துக் கொண்டிருக்கிறார்கள். மிகப் பெரிய துயர சம்பவத்தை நியாயப்படுத்தி பேசுவது எந்த விதத்தில் சரி? அரசியல்வாதிகள் தப்பித்துக்கொள்ள என்ன வேண்டுமானாலும் பேசலாம். ஆனால், அரசு அதிகாரிகள் நடுநிலையோடு செயல்பட வேண்டும், இதைத்தான் மக்கள் எதிர்பார்க்கிறார்கள். இந்த ஆட்சியிலும், அதிகாரிகளிடமும் அது கிடைக்காது.

சட்டம் ஒழுங்கு ஏடிஜிபி நடந்த சம்பவத்தை நியாயப்படுத்தி பேசுகிறார், நீங்க என்ன அரசியல்வாதியா? சட்டத்தைப் பாதுகாப்பது தான் உங்கள் பொறுப்பு. சரியான பாதுகாப்பு கொடுக்காததால் இத்தனை பேரை இன்றைக்கு நாம் இழந்திருக்கிறோம். கரூரில் ஒரு டிஎஸ்பி தலைமையில் விசாரணை நடக்கிறது, அப்படியிருக்கும்போது ஏடிஜிபி செய்தியாளர்களிடம் நியாயப்படுத்தி பேசினால், கீழே இருக்கும் அதிகாரி எப்படி நியாயமாக விசாரிப்பார்? இவை எல்லாமே நடந்த தவறை மறைப்பதற்கு அரசு நடத்தும் கண் துடைப்பு நாடகம்.

இவ்வளவு பிரச்சினை ஏற்பட்ட பிறகும் முதல்வர் ஸ்டாலின் திருந்தவில்லை. கூட்டத்தில் மயங்கி விழுந்த பெண்மணியைத் தூக்கிக்கொண்டு செல்கிறார்கள், தலை சாய்ந்து செல்கிறார்கள். இப்படி தமிழர்கள் தலை குனிந்த காட்சிகளைக் கண்டு அனைவரும் பதறிப்போயிருக்கிறார்கள், இதற்கு பதில் சொல்ல வேண்டியது முதல்வர் தானே?

ஒருநபர் கமிஷன் அமைத்துள்ளீர்கள், எந்த தகவல் என்றாலும் அதை கமிஷனில் தான் கொடுக்க வேண்டும். அதிகாரிகள் மூலம், தன்னுடைய அதிகாரத்தை வைத்து உண்மை சம்பவத்தை மறைத்துவிடலாம் என்றால் நிச்சயமாக நடக்காது, மக்கள் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை உணரவேண்டும்.

கரூரில் இருக்கும் முன்னாள் அமைச்சர் ஏன் பதறுகிறார்? மடியில் கனமில்லை என்றால் வழியில் பயம் இருக்கக் கூடாது, ஆனால் முகத்தில் பயம் தெரிகிறது. அவர் பேச்சில் பயம் தெரிகிறது, மாறி மாறி அதிகாரிகள், முன்னாள் அமைச்சர் எல்லாம் உண்மையை மறைத்துப் பேசுகிறார்கள். இதற்கெல்லாம் தேர்தலில் மக்கள் தகுந்த பதிலடி கொடுப்பார்கள்.

பணத்தைக் கொடுத்து மக்களை விலைக்கு வாங்கிவிடலாம் என்று கரூர் எம்எல்ஏ நினைத்துக்கொண்டிருக்கிறார். ஒருமுறை மக்கள் ஏமாந்துவிட்டார்கள், இனியும் மக்கள் ஏமாற மாட்டார்கள். உங்களுடைய போலிக் கொலுசு, போலி வாக்குறுதி இனி எடுபடாது.

அரவக்குறிச்சி இடைத்தேர்தலில் அங்குள்ள தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 3 சென்ட் இடம் தன்னுடைய சொந்தப் பணத்தில் வாங்கிக் கொடுப்பதாகவும், வீடுகட்டித் தருவதாகவும் 25 ஆயிரம் பேருக்கு வாக்குறுதி கொடுத்தார். அந்த வாக்குறுதி நிறைவேற்றப்பட வேண்டும். இன்றைய முதல்வர் அன்றைய எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும்போது பொதுக்கூட்டத்தில் பேசிய அத்தனையும் வெற்று அறிவிப்பு. அவற்றை எல்லாம் மாவட்ட மக்கள் ஞாபகம் வைத்திருக்கிறார்கள், எப்போது தேர்தல் வரும் என்று எதிர்பார்க்கிறார்கள். சரியான தண்டனை வழங்குவார்கள்.

துயர சம்பவம் நடந்துவிட்டது. முதல்வர் இரவோடு இரவாக வந்து ஆறுதல் சொன்னார். ரைட்டு. துணை முதல்வர் உல்லாசமாக வெளிநாடு போய்விட்டார். ஏன் இங்கே நாடு பத்தி எரிஞ் சிக்கிட்டு இருக்கு, நாட்டு மக்கள் பதறிக்கொண்டு இருக்கிறார்கள். உடனே தனி விமானம் பிடித்து வருகிறார், பார்த்தார், மீண்டும் விமானம் ஏறி போய்விட்டார். இவரெல்லாம் ஆண்டால் நாடு உருப்படியாக இருக்குமா? மக்கள் உயிரிழந்து துடிக்கும் நேரத்தில் கூட இவர்களுக்கு இரக்கம் இல்லை, உல்லாச சுற்றுப்பயணம் தான் முக்கியம். இவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதை நாட்டு மக்கள் உணரவேண்டும்.

நெரிசலில் ஒரு துணை முதல்வர் இவ்வளவு பெரிய பிரச்சினை ஏற்படும்போது எங்கே இருக்க வேண்டும்? தமிழ்நாட்டில் இருந்து தேவையான உதவிகளை செய்துகொடுக்க வேண்டும். கூட்ட நெரிசலில் சிக்கியவர்கள், பாதிக்கப்பட்டவர்களுக்கு எப்படி சிகிச்சை அளிக்கப்படுகிறது என்பதையெல்லாம் திட்டமிட்டு செயல்படுத்தி இருந்தால் ஒரு நல்ல துணை முதல்வர் என்று சொல்லலாம். ஆனால் அதையெல்லாம் கருணாநிதி குடும்பத்தில் எதிர்பார்க்க முடியாது.

யார் எப்படி இருந்தால் என்ன..? தன் குடும்பம் நன்றாக யிருக்க வேண்டும். மக்களை சுரண்டி உல்லாச வாழ்க்கை வாழ வேண்டும். இதுதான் ஆட்சியாளர்களின் குறிக்கோள். இனியாவது அரசியல் கட்சிகள் நடத்தும் கூட்டத்துக்கு முறையான பாதுகாப்பு கொடுங்கள், இந்தக் கட்சி, அந்தக் கட்சி என்று பிரித்துப் பார்க்காதீர்கள். தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் நம்முடைய சகோதர, சகோதரிகள். யார் இறந்தாலும் அது நம் குடும்ப இழப்பு என்பதை உணரவேண்டும். திமுக இன்னமும் உணர்ந்தபாடில்லை.

அவர்கள் கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகள் ஜால்ரா அடிக்கின்றன. திருமாவளவன் உண்மையில் மனசாட்சியோடு பேசுகிறாரா? 41 உயிர் போன நேரத்தில் ஏதேதோ குற்றச்சாட்டுகள் சொல்லி ஆட்சியாளர்களுக்கு தூபம் போடுவதை விட்டுவிடுங்கள்.

இதே திருமா திருச்சியில் மாநில மாநாடு நடத்தினார். அவரை எப்படியெல்லாம் அலைக்கழித்தார்கள் என்பதை அவரே கூறினார். இடது கம்யூனிஸ்ட் விழுப்புரத்தில் மாநாடு நடத்தினார்கள், முழுமையான அனுமதி கொடுக்கவில்லை என்பதை எல்லாம் மறந்துவிடாதீர்கள் உங்கள் கட்சிக்கும் இதே நிலை ஒருகாலத்தில் வந்தே தீரும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்” என்று எடப்பாடி பழனிசாமி பேசினார்.

முன்னதாக, கரூரில் நடைபெற்ற தவெக கூட்டத்தில் நெரிசலில் சிக்கி உயிரிழந்த 41 பேருக்கு 2 நிமிடம் மவுன அஞ் சலி செலுத்துமாறு கூட்டத்தில் பங்கேற்றவர்களிடம் எடப்பாடி பழனிசாமி கேட்டுக்கொண்டார். அதன்படி அனைவரும் மவுன அஞ்சலி செலுத்தினர்.

### செங்கல்பட்டு அருகே கடலில் மூழ்கி 3 பேர் பலி:

## முதல்வர் தலா ரூ.3 லட்சம் நிவாரணம் அறிவிப்பு

சென்னை: அக்.3-

செங்கல்பட்டு மாவட்டம் சூளேரி காட்டுக்குப்பம் கடற்கரை பகுதியில் கடலில் மூழ்கி உயிரிழந்த மூவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறியுள்ள முதல்வர் ஸ்டாலின் தலா ரூ.3 லட்சம் நிவாரணம் அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிவிப்பில்: "செங்கல்பட்டு மாவட்டம் திருப்போரூர் சூளேரி காட்டுக்குப்பம் கடற்கரை பகுதியில் கடந்த மாதம் 28ம் தேதி மாலை சென்னை பெரம்பூர் அகரம் பகுதியில் இருந்து வேன் ஒன்றில் 17 நபர்கள் சுற்றுலா வந்துள்ளனர். அவர்களில் பெரம்பூர், சக்கர பாணி தோட்டத்தைச் சேர்ந்த வெங்கடேசன் (36) என்பவர் எதிர்பாராதவிதமாக கடலில் மூழ்கி உயிரிழந்தார். மேலும், அவரது இரண்டு மகள்கள் கார்த்திகா (17) மற்றும் துளசி (16) ஆகிய



இருவரும் கடலில் அடித்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இதனிடையே, கடந்த மாதம் 30ம் தேதி அன்று சிறுமிகள் இருவரின் உடல்கள் உயிரிழந்த நிலையில் கண்டெடுக்கப்பட்டது என்ற துயரகரமானச் செய்தியைக் கேட்டு மிகவும் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இச்சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்த மூன்று நபர்களின் குடும்பத்தினருக்கு தலா மூன்று லட்சம் ரூபாய் முதல்வரின் பொது நிவாரண நிதியில் இருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்” என்று முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளார்.

## குறைவான கூலி, கடுமையான வேலை: புலம்பெயர் தொழிலாளர்கள் மீதான கொடுமைக்கு தீர்வு கோரும் சிபிஎம்

சென்னை: அக்.3-

எண்ணூர் விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு கூடுதலாக ரூ.25 லட்சம் இழப்பீடு வழங்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். குறைவான கூலிக்கும், கடுமையாக வேலை வாங்கும் முறைக்கும் புலம் பெயர் தொழிலாளர்களை பயன்படுத்தும் கொடுமைகளுக்கு அரசு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும். என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்: “திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி வட்டம், மீஞ்சூர் அடுத்துள்ள வயலூர் ஊராட்சியில் எண்ணூர் அனல்மின் நிலைய கட்டுமான பணியின் போது சாரம் சரிந்து, பணி செய்து கொண்டிருந்த 9 வட மாநில தொழிலாளர்கள் உயிரிழந்த சம்பவம் பெரும் அதிர்ச்சியையும், வேதனையும் அளிக்கிறது. உயிரிழந்த தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

எண்ணூர் சிறப்பு பொருளாதார மண்டலம் பகுதியில் அமைந்துள்ள 2 X 660 மெகா வாட் திறன்





கொண்ட அனல் மின் நிலையம் அமைக்கப்பட்டு வருகின்றது. பாரத் ஹெவி எலக்ட்ரிக்ஸ் நிறுவனத்திற்கு இந்த கட்டுமானப் பணிகளை முழுமையாக முடித்துக் கொடுப்பதற்கு தமிழ்நாடு மின்சார வாரியம் ஒப்பந்தம் அளித்துள்ளது. இந்த தொழிற்சாலையில் அடுத்தடுத்து கட்டுமானப் பணிகளின் போது விபத்து நடைபெறுவதும், புலம் பெயர்ந்த தொழிலாளர்கள் மரணத்தை எதிர்கொள்வதும் அதிகரித்துள்ளது.

கடந்த இரண்டு மாதத்தில் மீஞ் சூர் பகுதியில் நடந்த இரண்டாவது விபத்தாகும் இது. கடந்த விபத்தின் போது ஒரு தொழிலாளர் உயிரிழந்தார். தற்போது 150 அடி உயரத்தில் உரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் இல்லாததால் சாரம் சரிந்து 9 தொழிலாளர்கள் உயிரிழந்துள்ளனர். நிறுவனங்கள் பின்பற்ற வேண்டிய பாதுகாப்பு நடைமுறைகளை தமிழ்நாடு மின்சார வாரியமும், ஒப்பந்தம் எடுத்த பெல் நிறுவனமும் இணைந்து மேற்கொண்டிருக்க வேண்டும். அதை செய்யாததன் விளைவே இந்த உயிரிழப்புகளுக்கு முக்கிய காரணம் என்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சுட்டிக் காட்டுகிறது.

குறைவான கூலிக்கும், கடுமையாக வேலை வாங்கும் முறைக்கும் புலம் பெயர் தொழிலாளர்களை பயன்படுத்தும் கொடுமைகளுக்கு அரசு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும். அவர்களுக்கு சட்டப்படியான பாதுகாப்பு, வேலை நேரம், சட்டப்படியான கூலி உள்ளிட்டவைகள் வழங்குவதையும், குறிப்பாக, புலம் பெயர் தொழிலாளர் சட்ட விதிமுறைகள் பின்பற்றப்படுவதையும் தமிழ்நாடு அரசு உறுதி செய்திட வேண்டும். மனித உழைப்பை, உயிரை மதிக்காத நிறுவனங்களுக்கான ஒப்பந்த உரிமைகளை ரத்து செய்வது உள்ளிட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தமிழக அரசை வலியுறுத்துகிறது.

மேலும், உயிரிழந்த குடும்பத்தினருக்கு தமிழ்நாடு அரசு ரூ.10 லட்சமும், மத்திய அரசு ரூ.2 லட்சமும் நிவாரணம் அளித்துள்ளது. உயிரிழந்தவர்கள் அனைவரும் 30 வயது மதிக்கதக்க இளைஞர்கள் என்பதால் ஒப்பந்தம் எடுத்துள்ள பெல் நிறுவனத்திடம் இருந்து உயிரிழந்த தொழிலாளர்களின் குடும்பத்திற்கு கூடுதலாக ரூ.25 லட்சம் இழப்பீடும், படுகாயமுற்று சிகிச்சையில் இருக்கும் தொழிலாளர்களுக்கு உயர் தர மருத்துவ சிகிச்சையும், பாதிப்புக்கு ஏற்ற இழப்பீடும் வழங்கிட தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்துகிறது” என்று பெ.சண்முகம் கூறியுள்ளார்.

# மகாத்மா எனும் மனிதர்

குஜராத் மாநிலம் போர்பந்தர் என்னும் சிற்றூரில் கரம் சந்த் காந்தி புத்லிபாய் தம்பதிக்கு நான்காவது குழந்தையாக அக்டோபர் 2, 1869 பிறந்தவர் தான் மோகன் தாஸ் கரம் சந்த் காந்தி. படித்து சராசரி மாணவராக இருந்த காந்தி உண்மை, நேர்மை, வாய்மை போன்ற நற்குணங்களை வளர்த்துக் கொண்டார். இதற்கு அவர் பார்த்த ஹரிச்சந்திரா நாடகமும், ராமாயணம், மகாபாரதம் கதைகளைக் கேட்டதும் முக்கியக் காரணமாகும். 1883 இல் காந்தி மற்றும் கஸ்தூரிபாய் திருமணம் நடந்தது. இத்தம்பதிக்கு நான்கு குழந்தைகள் பிறந்தனர்.

காந்தி லண்டன் சென்று வழக்கறிஞர் பணிக்கான பாரிஸ்டர் கல்வியைப் பெற்றார். அதன்பின் மும்பையில் சட்ட மேற்படிப்பை முடித்த காந்தி அங்கேயே உயர் நீதிமன்ற வழக்கறிஞராக பதிவு செய்து கொண்டார். வழக்கறிஞர் தொழிலில் மிகக் குறைவான வருமானமே கிடைத்தது.

தாதா அப்துல்லா என்பவர் மகாத்மா காந்தியை தென்னாப்பிரிக்காவில் இருந்த தனது நிறுவனத்திற்கு சட்ட ஆலோசகராக இருக்கும்படி கேட்டுக் கொண்டார். தென் ஆப்பிரிக்காவில் இந்தியர்களும், கருப்பின மக்களும் அடிமைகளாக நடத்தப்பட்டனர். இந்தியர்களுக்கும், கருப்பின மக்களுக்கும் போராட 'நேட்மால் இந்திய காங்கிரஸ்' என்ற கட்சியை மற்ற சிலரோடு சேர்த்து துவங்கினார். கட்சியின் முழக்கத்தை மக்களிடம் கொண்டு சேர்க்க 'இந்தியன் ஒப்பினியன்' என்ற பத்திரிகையைத் தொடங்கினார். தொடர்ந்து மக்களுக்காக போராடிய காந்தி அதற்காக சிறை தண்டனையையும் அனுபவித்தார். 1910 ஆம் ஆண்டு கோபாலகிருஷ்ண கோகுலே தென்னாப்பிரிக்கா சென்று காந்தியை சந்தித்து பேசினார். சுமார் 20 ஆண்டுகள் தென்னாபிரிக்காவில் இருந்த காந்தி மக்களுக்காக பல்வேறு போராட்டங்களை நடத்தினார்.

1914, ஆம் ஆண்டு காந்தி தன் அரசியல் குருவான கோபால கிருஷ்ண கோகலேயின் அழைப்பை ஏற்று தென்னாப்பிரிக்காவில் இருந்து இந்தியா வந்தார். கோகலேவை சந்தித்த பின் மும்பை மற்றும் லக்னோவில் நடந்த காங்கிரஸ் மாநாடுகளில் கலந்து கொண்டார். ஆங்கிலேயரை எதிர்த்து இந்தியர்கள் போராடும் தன்மையை தெரிந்து கொண்டார். பல தலைவர்களை சந்தித்துப் பேசினார். நாடு முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டார்.

அவுரிச் சாகுபடி திட்டம் எனப்படும் சம்ரான் போராட்டத்தில் விவசாயிகளுக்கு ஆதரவாகப் போராடி இந்திய விடுதலைப் போராட்டத்தில் தனது முதல் வெற்றியைக் கண்டார். தொடர்ந்து அலகாபாத் ஆலைத் தொழிலாளர்கள் போராட்டத்திற்கும் உறுதுணையாக இருந்து வெற்றியைப் பெற்றார். ஜவஹர்லால் நேரு, வல்லபாய் பட்டேல், சத்தியமூர்த்தி போன்றோர் அவரோடு இணைந்து செயல்பட ஆரம்பித்தனர். ஜாலியன் வாலாபாக் படுகொலையை கண்டித்து பெரும் போராட்டத்தை காந்தி நடத்தியதை தொடர்ந்து ஆங்கிலேய அரசு மன்னிப்பு கேட்டது.

இந்திய வளங்களை சுரண்டுவதிலும், போராட்டத் தலைவர்களை சிறைப்படுத்துவதிலும் தீவிரமாக இருந்த ஆங்கிலேய அரசுக்கு ஒத்துழைப்புக் கொடுப்பதை நிறுத்தும்படி அறவழிப் போராட்டத்தை நடத்தினார் காந்தி. ஒத்துழையாமை இயக்கம் என்ற பெயரில் நாடு முழுவதும் இது அரசுக்கு எதிராக கிளர்ச்சியை உருவாக்கியது. இதன் காரணமாக அரசு ஊழியர்கள் அலுவலகங்களுக்கு செல்வதையும், கல்லூரி மாணவர்கள் கல்லூரிக்கு செல்வதையும், ஆலைத் தொழிலாளர்கள் ஆலைக்கு செல்வதையும் தவிர்த்தனர். சுதேசி இயக்கம் என்ற பெயரில் அந்நியப் பொருள்களை வாங்குவதை தடை செய்வதையும் முன்மொழிந்தார் காந்தி. ஆங்கிலேய அரசுக்கு வரி கொடுப்பதையும் தவிர்க்கும்படி கேட்டுக் கொண்டார். சதிகார ஆங்கிலே அரசு காந்தியை கைது செய்தது. சைமன் கமிஷனையும் புறக்கணித்தனர் காந்தி உள்ளிட்ட காந்தி உள்ளிட்ட தலைவர்கள். எங்கள் நாட்டை நாங்களே ஆண்டு கொள்கிறோம். எங்கள் நாட்டை விட்டு செல்லுங்கள் என்று ஆங்கிலேயருக்கு எதிராக லாகூர் காங்கிரஸ் மாநாட்டில் காந்தி முழக்கமிட்டார்.

ஏப்ரல் 6, 1930 உப்புக்கு எதிரான வரியை எதிர்த்து தண்டியில் உப்பு சத்தியாகிரகப் போராட்டம் நடைபெற்றது. காந்தியைக் கைது செய்த ஆங்கிலேய அரசு சுமார் பத்து மாத காலத்திற்குப் பிறகு அவரை விடுதலை செய்தது. 1931 ஆம் ஆண்டு உப்பு வரியை நீக்குதல்,விவசாயிகளிடம் பிடுங்கப்பட்ட சொத்துகளை ஒப்படைத்தல் விடுதலைப் போராட்ட வீரர்களை விடுதலை செய்தல், போன்றவற்றை வலியுறுத்தி சட்ட மறுப்பு இயக்கத்தை முன்மொழிந்தார் காந்தி.

இந்தியர்களின் தேவையை கேட்பதற்கு அழைக்கப்பட்ட அந்தக் கூட்டத்தில் ஆங்கிலேய அதிகாரிகள் அதைப் பற்றி பேசாமல் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தனித்தொகுதி வழங்குவது பற்றிய பேச்சை எடுத்தனர். இதை முற்றிலும் எதிர்த்த காந்தி இந்தியர் அனைவரும் ஒரு தாய் மக்களே. அவர்களுக்குள் பிரிவினையை ஏற்படுத்த வேண்டாம் என்று கூறி செப்டம்பர் 20, 1932 இல் உண்ணாவிரதத்தை தொடங்கினார். தனது அரிஜன நூலில் மனிதர்க்கு மனிதன் பேதம் பார்ப்பது கடவுளை இழிவுபடுத்துவதாகும் என்று எழுதினார். இரண்டாம் உலகப் போருக்கு எதிராகவும் அதில் இந்தியர்களை பயன்படுத்துவதை எதிர்த்தும் காந்தி வினோபாமாவே உடன் இணைந்து அக்டோபர் 17, 1940 வார்தாவில் ஓர் எதிர்ப்பு பிரச்சாரத்தை தொடங்கினார். இதன் காரணமாக வினோபமாவ கைது செய்யப்பட்டார். இந்தியா முழுவதும் இரண்டாம் உலகப் போரை எதிர்த்து சத்தியாகிரகம் நடைபெற்றது.

நாட்டை பிரித்தாலும் முயற்சியில் கிரிப்ஸ் குழு பரிந்துரைத்த முன்மொழிவை காந்தி முழுமையாக எதிர்த்தார் .எங்களுக்குள் சாதி, மத சண்டை இல்லாமல் முழுமையாக நாங்களே எங்கள் நாட்டை முழு சுதந்திரத்துடன் ஆட்சி செய்வதற்கு அதிகாரத்தை கொடுங்கள் என்று முழக்கமிட்டார். ஆகஸ்ட் 8, 1942 இல் வெள்ளையனே வெளியேற இயக்கத்தை முன்மொழிந்தார் காந்தி. இதற்காக அவரை மீண்டும் கைது செய்தது ஆங்கிலேய அரசு. நாடு முழுவதும் பெரும் கலவரம் ஏற்பட்டது சுதந்திரப் போராட்ட வீரர்களும் தலைவர்களும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.. ஆங்கிலேயரின் சர்வதிகார போக்கை அறிந்த காந்தி சிறையில் உண்ணாவிரதம் மேற்கொண்டார்.

மவுன்ட் பேட்டன் பிரபு ஜின்னாவையும், காந்தியையும் அழைத்துப் பேசினார். ஜின்னவோ முஸ்லிம்களுக்கென்று தனிநாடு வேண்டும் என்று முழங்க காந்தி ஒரே நாடு என்ற கொள்கையை முன் வைத்தார். மவுண்ட் பேட்டன் பிரபுவும் இந்தியா முஸ்லிம் மற்றும் இந்துக்களுக்கான தனித்தனி நாடாக இருக்க வேண்டும் என்பதை முன்மொழிந்தார்.

காந்தியின் தொடர் அகிம்சை போராட்டத்திற்கு முன் இனியும் நம்மால் தாக்குப் பிடிக்க முடியாது என்பதை உணர்ந்த ஆங்கிலேய அரசு அடிபணிந்தது. ஆகஸ்ட் 15, 1947 முதல் இந்தியா சுதந்திர நாடாக தரணியில் தடம் பதிக்க ஆரம்பித்தது.

1914 முதல் 1947 வரை 33 ஆண்டுகள் காந்தியின் இடைவிடாத அறப்போராட்டம் இந்தியாவிற்கு விடுதலையைப் பெற்றுத் தந்தது என்றால் அது மிகை யாகாது. அகிம்சையால் அகிலத்தையும் ஆளலாம் என்பதை உலகிற்கு எடுத்துக்காட்டிய நவீன மனிதராக காந்தி அறியப்படுகிறார்.

மார்ட்டின் லூதர் கிங் (ஜூனியர்), நெல்சன் மண்டல ஆகியோர் காந்தியின் அகிம்சை வழியில் மக்களுக்காக போராடினார். இவரின் தபால் தலைகளை உலகில் உள்ள சுமார் நூற்றுக்கு மேற்பட்ட நாடுகள் வெளியிட்டன.. இந்திய அரசு வெளியிட்ட ரூபாய் தாள்களில் காந்தியின் உருவப்படத்தை குறித்து வெளியிட்டுக் கொண்டிருக்கிறது.

தன்னலம் பாராது நாட்டின் விடுதலைக்கு வித்திட்ட காந்தியின் பெருமையைப் பறைசாற்றும் வகையிலும், சாதி மத பேதம் இல்லாமல் மக்கள் ஒற்றுமையுடன் வாழ வேண்டும் என்ற உன்னத நோக்கத்திற்காகவும், எளிமையான அடையாளமாக திகழ்ந்ததற்காகவும், விடுதலைப் பெற்ற பிறகு அமைச் சரவையில் தன்னை இணைத்துக் கொள்ளாத உயர்ந்த பண்பிற்காகவும் காந்தி 'தேசத் தந்தையாகப்' போற்றப்படுகிறார். மனித இலக்கணத்திற்கு அப்பாற்பட்டு ஒரு மகானாக வாழ்ந்தமைக்காக 'மகாத்மா' எனப் போற்றப்படுகிறார்.

காந்தி உள்ளிட்ட தலைவர்கள் தங்களின் உயிரை துச்சமென நினைத்து இரண்டு, மூன்று நூற்றாண்டுகளாக தொடர்ந்து போராடியதன் பலனாகவே அந்நியராட்சியை நம் மண்ணிலிருந்து அகற்றியதாலே ஒன்றுபட்ட சுதந்திர நாடாகவும், குடியரசு நாடாகவும், வளம் மிகுந்த நாடாகவும் இந்தியா இருக்கிறது. உலக நாடுகள் வியந்து பார்க்கக் கூடிய வகையில் நம் தேசத்தின் வளர்ச்சி இருக்கிறது. இன்றைய இளைய தலைமுறையினர் காந்தி போன்ற தலைவர்களின் உன்னதமான தியாக உணர்வை கருத்தில் கொண்டு நம் நாட்டை இன்னும் சிறந்த முறையில் முன்னேற்ற பாதையில் கொண்டு செல்ல ஆக்கப்பூர்வமான சிந்தனைகளை விதைக்க வேண்டும்.



கட்டுரையாளர்,
ம. பிரபு
பட்டதாரி ஆசிரியர்,
கல்லல் முருகப்பா
மேல்நிலைப் பள்ளி,
கல்லல்,
சிவகங்கை மாவட்டம்,
அலைபேசி :
9944089151



## வேலூர் தோட்டப்பாளையம், தந்தி அலுவலகம் அருகே, மஸ்ஸல் பிலக்ஸ் ஜிம் திறப்பு விழா

வேலூர், அக்.03-

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, தோட்டப் பாளையம், தந்தி அலு வலகம் அருகே, தனலட்சுமி வங்கி மேல் மாடியில், மஸ்ஸல் பிலக்ஸ் ஜிம் திறப்பு விழா, பி.கே.ஶ்ரீனிவாசன் ஹேமலதா மற்றும் சன்ஸ், எஸ்.சூர்யா, எஸ்.கார்த்தி ஆகியோர் தலைமையில் ஜிம் திறப்பு விழா கோலாகலமாக நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளர்களாக பிட்னெஸ் பயிற்சியாளர் சதீஷ்குமார், மஸ்ஸல்ஸ் இன்ஜினியர் இயக்குனர் ஜோதி மணிகண்டன் மற்றும் மாநகர மாவட்ட அதிமுக செயலாளர் எஸ்.ஆர்.கே. அப்பு ஆகியோர் கலந்து கொண்டு ரிப்பன் வெட்டி, குத்து விளக்கேற்றி துவக்கி வைத்து சிறப்பித்தனர். இவ்விழாவில் வாடிக்கையாளர்கள், பகுதிம க்கள், பிட்னஸ் பயிற்சி யாளர்கள் தொழி லதி பர்கள் மற்றும் பி.கே.ஶ்ரீனிவாசன் ஹேமலதா குடும்ப த்தினர்கள், உறவின ர்கள் என பலர் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.



## தற்கொலை படை வீராங்கனை குயிலிக்கு தனி மணிமண்டபம் வேண்டி விசிக கோரிக்கை

சிவகங்கை, அக்.03-

சிவகங்கை மாவட்டம் வீரமங்கை ராணி வேலுநாச்சியார் நினைவு மண்டபம் அருகில் அமைந்துள்ள முதல் தற்கொலை படை போராளி வீரதாய் குயிலிக்கு விடுதலைச்சிறுத்தைகள் கட்சியின் சார்பாக வீரவணக்கம் இன்று செலுத்தப்பட்டது.இந்த நிகழ்ச்சியில் சிவகங்கை மாவட்ட செயலாளர் வழக்கறிஞர் பாலையா தலைமையில், மாவட்ட செயலாளர் வடக்கு இளைகௌதமன் முன்னிலையில் கட்சியின் மாநில துணைப்பொதுச்செயலாளர் கனியமுதன் சிறப்பு அழைப் பாளராக கலந்து கொண்டார். மண்டதுணைச் செயலாளர் முத்துராசு. மாவட்ட பொருளாளர் பாஸ்கரன்.மாவட்ட செய்தி தொடர்பாளர் ஆதிவளவன். மாநில துணைச்செயலாளர் வழக்கறிஞர் அய்யனார் மற்றும் சுடர்மணி மற்றும் விடுதலைச்சிறுத்தைகள் கட்சி பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர் மாநில நிர்வாகிகள் லைச்சாமி, திருமொழி, அய்யனார், பால முருகன் , திருப்புவனம் ஒன்றிய செயலாளர் கண்ணன் ,சிவகங்கை ஒன்றிய செயலாளர் ராமதாசு, காளையார் கோவில் ஒன்றிய செயலாளர்கள் காளிதாசு, விஜயன்,இளையான்குடி ஒன்றிய செயலாளர் சதிஸ்வளவன், மானாமதுரை ஒன்றிய செயலாளர் கிருஷ்ணமூர்த்தி மற்றும் பலர் கலந்துகொண்டனர். தமிழக அரசுக்கு விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில் கோரிக்கையாக வீரதாய் குயிலிக்கு தனியாக மணிமண்டபம் கட்டி தர வேண்டும் என்று கோரிக்கை வைத்தனர்



■ சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அருகே ஶ்ரீராம் நகர் வள்ளல் அழகப்பர் சிலை எதிரே அமைந்துள்ள காரைக்குடி கிட்ஸ் ஸ்கூல் அண்ட் டேய் கேர் பள்ளி திறப்பு விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. உதவி மாவட்ட கண்காணிப்பாளர் ஏ எஸ் பி ஆசீஸ் புனியா ஐபிஎஸ், காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.மாங்குடி, குழந்தைகள் நல மருத்துவர் அறிவழகன், காரைக்குடி மாநகர துணை மேயர் என் .குணசேகரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு திறந்து வைத்தனர். பள்ளி திறப்பு விழா நிகழ்வினைத் தொடர்ந்து விஜயதசமியை முன்னிட்டு குழந்தைகள் சேர்க்கை நடைபெற்றது. பள்ளி நிர்வாக இயக்குனர்கள் ரூபா ஶ்ரீ, ராஜ சுலக்சனா அனைவரையும் வரவேற்றனர். விழாவில் அரசியல் பிரமுகர்கள், தொழிலதிபர்கள், குழந்தைகளின் பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர்.



### புதுப்பாக்கம் ஊராட்சியில்

## ஊராட்சி மன்ற தலைவர் மா.ஆறுமுகம் தலைமையில் ஊராட்சி மன்ற அலுவலகத்தில் ஆயுத பூஜை விழா

புதுப்பாக்கம், அக்.03-

செங்கல்பட்டு மாவட்டம் திருப்போரூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட புதுப்பாக்கம் ஊராட்சியில் ஊராட்சி மன்ற தலைவர் மா.ஆறுமுகம் தலைமையில் ஊராட்சி மன்ற அலுவலகத்தில் ஆயுத பூஜை மிக சிறப்பாக கொண்டாடப்பட்டது. இந்த பூஜையில் வார்டு உறுப்பினர்கள் ஊராட்சியில் பணிபுரியும் அனைவருக்கும் ஊராட்சி மன்ற தலைவர் ஆறுமுகம் இனிப்புகள் பரிசு பொருட்களை வழங்கினார். உடன் ஊராட்சி செயலர் ஏழுமலை,ஊராட்சி மன்ற துணைத் தலைவர் லலிதா கிரி பாபு, ஒன்றிய குழு உறுப்பினர், வார்டு உறுப்பினர்கள், ஊராட்சிகள் பணி புரியும் அனைவரும் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்

## வானவில் மன்றத்தின் சார்பாக சிவகங்கை மாவட்டத்தில் அறிவியல் போற்றுதும் நிகழ்வுகள்





சிவகங்கை, அக்.03-

சிவகங்கை மாவட்டத்தில் வானவில் மன்ற கருத்தாளர்கள் 12 ஒன்றியங்களிலுள்ள அனைத்து அரசு பள்ளிகளிலும் கணித மற்றும் அறிவியல் செயல்பாடுகளை சிறப்பாக மாணவர்களுக்கு செய்து காட்டி அவர்களையும் அறிவியல் சோதனைகளை செய்து பார்க்கக் கூடிய அளவிற்கு அறிவியல் மனப்பான்மையை வளர்த்து வருகிறார்கள். காலாண்டு விடுமுறையில் தொடர் நிகழ்ச்சியாக கிராமங்களில் வானவில் மன்ற கருத்தாளர்கள் ஐந்து நாட்களாக அறிவியல் போற்றுதும் நிகழ்வுகளை பல்வேறு தளங்களில் செய்து வருகிறார்கள். மூலிகை தாவரங்களை அறிய செய்வதும் அஞ்சலகங்களில் வங்கிகளில் நடைபெறும் நடைமுறையை கற்றுக் கொடுப்பதும் நூலகங்களுக்கு சென்று புத்தகங்களை வாசிப்பதும் மருத்துவ குணமிக்க தாவரங்களை கண்டறிவதும் நீர் நிலைகளுக்கு செல்வதும் புத்தக வாசிப்பை மேம்படுத்தவும் குளக்கரை நடைப்பயணம் அறிவியல் சோதனைகளை செய்வதும் உள்ளூர் தாவரங்களை கண்டறிவதும் நீர்நிலைகளை ஆராய்வது போன்ற நிகழ்வுகளை சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர். அதன் ஒரு நிகழ்வாக காளையார்கோவில் கிளை நூலகத்தில் தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்டச் செயலாளர் வானவில் மன்ற இணை ஒருங்கிணைப்பாளர் முதன்மை கருத்தாளர் ஆரோக்கியசாமி தலைமையில் புத்தக வாசிப்பு நடைபெற்றது. வாசிப்பில் பங்கு பெற்ற அனைத்து மாணவ மாணவிகளுக்கும் விஞ்ஞான துளிர் புத்தகம் வழங்கப்பட்டது. ஆர்வமூட்டக்கூடிய சின்னச்சின்ன செயல்பாடுகள் செய்து காண்பிக்கப்பட்டன. கிளை நூலகர்கள் சகாயமேரி கீதாராணி காதர்பீவி அலமேலு ஊர்ப்புற நூலகர்கள் சகாயராணி ஜலி ஓய்வுபெற்ற ஆசிரியர் சத்தியமூர்த்தி ஆனந்தன் மற்றும் வாசகர்களுக்கு புத்தகம் நினைவு பரிசாக வழங்கப்பட்டது. விழா ஏற்பாட்டினை வானவில் மன்ற கருத்தாளர்கள் பாண்டிசெல்வி ஜெயபிரியா சிறப்பாக செய்திருந்தனர்.



■ தேசப்பிதா மகாத்மா காந்தி பிறந்த நாள் கொண்டாட்டம். அக்டோபர் 2, திருப்பூர் மாவட்டம் தாராபுரத்தில் மகாத்மா காந்தி பிறந்த நாள், முன்னாள் முதலமைச்சர் காமராஜர் நினைவு நாள் அனுசரிப்பு. திருப்பூர் மாவட்டம் தாராபுரத்தில் மறைந்த தேசப்பிதா மகாத்மா காந்தி 157 வது பிறந்தநாள், மற்றும் முன்னாள் முதலமைச்சர் கருமை வீரர் காமராஜர் 50 ஆம் ஆண்டு நினைவு தினம் அனுசரிக்கப்பட்டது இதில் திருப்பூர் தெற்கு மாவட்ட தலைவர் K. தென்னரசு தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி மாநில பொறுப்பாளர் வி எஸ் காளிமுத்து (முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்) நகரத் தலைவர் K செந்தில்குமார் மாநில மகிளா காங்கிரஸ் கானப்பிரியா சரோஜினி முருகேஸ்வரி குண்டடம்வட்டாரத் தலைவர் தாராபுரம் வட்டாரத் தலைவர் முத்துக்குமார் குடிமங்கலம் சீனிவாசன் ராசு (கவுன்சிலர்) மாவட்ட செயலாளர் கபூர் சாய் சீனிவாசன் நகரத் துணைத் தலைவர் அசோக்குமார் வீராச்சிமங்கலம் மோகன் ராஜேந்திரன் (INTUC) அருண்( கவுன்சிலர்)பசுபதி சுரேஷ்குமார் அலங்கியம் தாஸ் அக்கீம் அமீர் ஆகியோர்கள் திருவுருவப்படத்திற்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.



# ‘ஜெய் ஹனுமான்’ படத்தை ஒப்புக்கொண்டது எப்படி? ரிஷப் ஷெட்டி பதிர்வு

ரிஷப் ஷெட்டி, இயக்கி, நடித்துள்ள ‘காந்தாரா: சாப்டர் 1’ படத்தில் ருக்மணி வசந்த் நாயகியாக நடித்துள்ளார். ஹோம்பாளே பிலிம்ஸ் தயாரித்துள்ள இந்தப் படம் அக். 2ல் வெளியாகிறது. இதையடுத்து ‘ஜெய் ஹனுமான்’ என்ற படத்தில் நடிக்கிறார் ரிஷப் ஷெட்டி. இதை ‘ஹனுமன்’ பிரசாந்த் வர்மா இயக்குகிறார்.

பிரசாந்த் வர்மா சினிமாடிக் யுனிவர்ஸின் ஒரு பகுதியாக உருவாகிறது. ‘காந்தாரா: சாப்டர் 1’ ரிலீஸ் ஆவதை ஒட்டி, ‘ஜெய் ஹனுமான்’ படம் பற்றி ரிஷப் ஷெட்டி பேசியுள்ளார். அவர் கூறும்போது, “ ‘காந்தாரா: சாப்டர் 1’ ரிலீஸுக்கு முன் வேறு படங்களில் ஒப்பந்தமாக வேண்டாம் என்று நினைத்திருந்தேன். பிரசாந்த் வர்மா கதை சொன்னபோது, மறுக்க முடியவில்லை. உடனடியாக ஒப்புக் கொண்டேன். நாங்கள் ஒரு போட்டோஷூட்டையும் நடத்தினோம். அந்த படத்தின் முன் தயாரிப்பு பணிகள் நடந்து வருகின்றன. ‘காந்தாரா: சாப்டர் 1’ ரிலீஸுக்கு பிறகு இதன் படப்பிடிப்பை இறுதி செய்து தொடங்குவோம்” என்றார். ஜனவரி மாதம் தொடங்க இருக்கும் இப்படம், 2027ம் ஆண்டு வெளியாக இருக்கிறது.



# சினிமா கிறுக்கன்

மகிழ் புரொடக்ஷன்ஸ் சார்பில், சி.பியூலா தயாரிப்பில், தக்ஷன் விஜய் எழுத்தில் உருவாகும் ‘சினிமா கிறுக்கன்’ படத்தை, சமூக விரோதி, பொதுநலன் கருதி ஆகிய படங்களை இயக்கிய சீயோன் ராஜா இயக்குகிறார்.கதாநாயகன் தக்ஷன் விஜயின் அப்பாவாக பிரபல இயக்குனர் ஜி.ம்.குமார் நடிக்கிறார். அம்மாவாக தனுஷின் அம்மாவாக கர்ணன் படத்தில் நடித்த வாழை ஜானகி நடிக்கிறார். அமுதவாணன், ஜீவா, சாகிதா சுகன்யா, விதுஷ்னியா, கஞ்சா கருப்பு, இமான் அண்ணாச்சி மற்றும் பலர் நடிக்கிறார்கள். கதை, திரைக்கதை, வசனத்தை தக்ஷன் விஜய் எழுதுகிறார். ஒளிப்பதிவு வினு பெருமாள், இசை ஷ்யாம்.

# குற்றம் தவிர் சினிமா விமர்சனம்:




கணவன் துணை இல்லாமல், ஒரே மகளுடன் இட்லி கடை நடத்தி வரும் வினோதினி வைத்தியநாதன், தனது தம்பி ரிஷி ரித்விக் மீது உயிரையே வைத்திருக்கிறார். தம்பி போலீசாக வேண்டும் என்று கடுமையாக உழைக்கிறார். அப்போது திடீரென்று நெஞ்சுவலி ஏற்பட்டு, தம்பியின் லட்சியம் பாதிக்கக்கூடாது என்று, அவருக்கு தெரியாமல் இதய அறுவை சிகிச்சை பெறும்போது இறந்துவிடுகிறார். இதயத்துக்கு பதிலாக கிட்னியை ஆபரேஷன் செய்த டாக்டர் ஆனந்த் பாபுவை பிடித்து அடிக்கும்போது, அந்த மருத்துவமனை பலரை ஏமாற்றி, மாற்று அறுவை சிகிச்சை செய்து கொன்றது தெரியவருகிறது. இதற்கு பின்னால் ஒரு பெரிய கும்பல் இருப்பதை கண்டுபிடிக்கும் ரிஷி ரித்விக், அவர்களை என்ன செய்தார்? அக்காவின் கனவுப்படி போலீஸ் வேலையில் சேர்ந்தாரா என்பது மீதி கதை.

குற்றச்சம்பவங்களை கண்டு கொதிக்கும் ரிஷி ரித்விக், ஆக்ஷன் காட்சிகளில் கடுமையாக உழைத்திருக்கிறார். அக்காவுக்காகவும், அவரது மகளுக்காகவும் பாசத்தில் உருகுகிறார். வினோதினி வைத்தியநாதனின் குணச்சித்திர நடிப்பு சிறப்பு. சிறுமி சாய் சைந்தவி, ஜார்ஜ் விஜய், கான்ஸ்டபிள் ஆராத்யா, அமைச்சர் ‘பருத்திவீரன்’ சரவணன், ரவுடிகள் சாய் தீனா, காமராஜ், சென்ராயன், டாக்டர் ஆனந்த் பாபு ஆகியோரின் நடிப்பு கவனத்தை ஈர்க்கிறது.

கதைக்கான ஒளிப்பதிவை ரோவின் பாஸ்கர் செய்துள்ளார். ஸ்ரீகாந்த் தேவா இசையில் பாடல்கள் கேட்கும் ரகம். பின்னணி இசையில் கூடுதல் கவனம் செலுத்தி இருக்கலாம். மருத்துவமனையில் நடக்கும் மாற்று அறுவை சிகிச்சை, உடல் உறுப்புகள் திருட்டு, சமூக விரோதிகளுடன் அரசியல்வாதிகள் கூட்டணி வைத்து ஊழல் செய்வது என்று, பல படங்களில் பார்த்த சம்பவங்களையே இயக்குனர் கஜேந்திரா படமாக்கியுள்ளார். புதிதாக யோசித்து இருக்கலாம்.



# என் சாம்பியனுக்கு அருகில் இருக்கிறேன்: ஷாலினி அஜித் பதிவு வைரல்

துபாய், பெல்ஜியம் நாடுகளை தொடர்ந்து தற்போது ஸ்பெயின் நாட்டில் நடைபெறும் கார் பந்தயங்களில் பங்கேற்று வருகிறார் அஜித்குமார். இங்கு அஜித்குமார் ரேஸிங் சார்பில் நான்கு போட்டிகளில் பங்கேற்கிறார். இந்த மாதம் இரண்டு அடுத்த மாதம் இரண்டு என நான்கு போட்டிகள் அங்கு நடைபெறுகிறது. இதில் நேற்று முன்தினம் நடந்த போட்டியில் அஜித் அணி மூன்றாவது இடத்தை பிடித்து சாதித்தது. சோஷியல் மீடியாவில் அஜித் மற்றும் அவரது குடும்பத்தினரின் அழகிய புகைப்படங்கள் ரசிகர்களால் அதிகம் ஷேர் செய்யப்பட்டு வருகின்றது. இதனைத்தொடர்ந்து அஜித்தின் மனைவியும் பிரபல நடிகையுமான ஷாலினி தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் ஸ்பெயினில் அஜித்துடன் எடுத்த புகைப்படத்தை பதிவிட்டுள்ளார்.

‘‘என் சாம்பியனுக்கு அருகில் இருக்கின்றேன்’’ என கேப்ஷன் போட்டு ஷாலினிஅந்த புகைப்படத்தை பதிவிட்டு இருக்கின்றார். இது வைரலாகியுள்ளது. அஜித் தற்போது ஸ்பெயின் நாட்டில் நடைபெறும் மிக முக்கியமான கார் பந்தயத்தில் கலந்துகொண்டு வருகின்றார். இந்த முக்கியமான நேரத்தில் அஜித்துடன் இருக்க வேண்டும் என்பதற்காக ஷாலினி ஸ்பெயின் நாட்டிற்கு புறப்பட்டு சென்றிருக்கின்றார். தன் குடும்பம் அருகில் இருப்பதால் அஜித் இன்னும் நம்பிக்கையாக கார் ரேஸில் கலந்துகொண்டு மேலும் பல வெற்றிகளை பெறுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# “இந்தியா, பாக். வீரர்கள் நடத்தை... இது ஒரு தலைகுனிவு” கிர்மானி வேதனை



சமீபத்தில் நடந்து முடிந்த இந்தியா பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான ஆசியக் கோப்பை கிரிக்கெட் போட்டிகள் காணச் சகிக்க முடியாத அளவுக்கு விளையாட்டில் அரசியல் கலந்திருந்தது என்று முன்னாள் விக்கெட் கீப்பர் 1983 உலகக் கோப்பை நாயகர் சையத் கிர்மானி வேதனை தெரிவித்துள்ளார்.

இந்தியா பாகிஸ்தான் இரு அணி வீரர்களுமே முரட்டுத்தனமாகவும் திமிரெடுத்தும் நடந்து கொண்டனர் என்று சையத் கிர்மானி சாடியுள்ளார். அதாவது தற்கால கிரிக்கெட் ஆடப்படும் விதம் தனக்கு மிகவும் மனச்சோர்வையும் கவலையையும் அளிப்பதாக இருக்கிறது என்கிறார் சையத் கிர்மானி.


ஏ.என்.ஐ. செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில் அவர் கூறியதாவது: “நாடுகளின் பெயர்களை நான் குறிப்பிட விரும்பவில்லை இப்போது கிரிக்கெட் விளையாடப்படுகிற விதம் பெரும்பாலும், ஜெண்டில்மேன்கள் ஆட்டம் போல் தெரியவில்லை. மைதானத்தில் மிகவும் நாகரிகமற்ற திமிர் பிடித்த நடத்தை பெருகியுள்ளதுஞ் பல இடங்களிலிருந்தும் எனக்கு செய்திகள் வருகின்றனஞ் இந்திய அணி என்ன செய்தது? என்ன அரசியல் நடக்கிறது மைதானத்தில்? இந்த கருத்துகளை கேட்டாலே எனக்கு வெட்கமாக உள்ளது.

இன்றைய காலக் கட்டத்தில் கிரிக்கெட் வீரர்களுக்கு என்ன ஆகிவிட்டது? ஆசியக் கோப்பையில் நடந்தது அருவருப்பானதுஞ் இது என் மெஸேஜ்களில் வந்த வார்த்தைகள்ஞ் இன்றைய விளையாட்டின் நிலை என்னவாக மாறியுள்ளது என்பதைப் பார்த்தால் மனவேதனைதான் எஞ்சுகிறது. குறிப்பாக கிரிக்கெட்டில்ஞ் இது சரியானதல்ல. அரசியல் என்பது விளையாட்டில் புகக்கூடாத ஒன்றுஞ் அரசியலை விட்டு வெளியே வாருங்கள்.

விளையாட்டு மைதானத்திற்குப் வெளியே நடந்தது எதுவாக இருந்தாலும், அதை அங்கேயே விட்டு விடுங்கள். அதனை உங்கள் வெற்றியிலோ அல்லது இந்த ஆட்டத்திலிருந்து நீங்கள் என்ன பெற்றீர்களோ அதனுடன் சம்பந்தப்படுத்தாதீர்கள். இதுவொரு உயர்ந்த விளையாட்டு. அதை அரசியலுடன் தொடர்புபடுத்தாதீர்கள்ஞ் உயர்ந்த நோக்கங்களுக்காக அர்ப்பணிக்க விரும்பினால் அது நல்லதுதான் ஆனால் அதையும் அரசியலுடன் இணைக்க வேண்டாம்ஞ்

எங்களுடைய காலத்தில் கிரிக்கெட்டில் எத்தனை அற்புதமான நட்பு இருந்தது. பாகிஸ்தானிய வீரர்கள் இந்தியாவுக்கு வருவார்கள், நாங்கள் பாகிஸ்தானுக்கு செல்வோம். என்ன உபசாரம், என்ன அன்பு, என்ன பாசம்ஞ் இன்றைய நிலையைப் பார்த்தால், ஒரு கிரிக்கெட் வீரராக நான் என் தலைகுனிய வேண்டிய நிலை உருவாகியுள்ளது” என்று சையத் கிர்மானி வேதனை தெரிவித்துள்ளார்.

# பவுலிங்கில் ‘ரன் மெஷின்’ ஹாரிஸ் ராவுஃப் வாசிம் அக்ரம் செம கிண்டல்




இந்தியா பாகிஸ்தான் ஆசியக் கோப்பை இறுதிப் போட்டியில் பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சாளர் ஹாரிஸ் ராவுஃப் 3.4 ஓவர்களில் 50 ரன்களை வாரி வழங்கினார். இன்னும் சொல்லப்போனால் ஒரே ஓவரில் இவர் 17 ரன்களை அன்று வாரி வழங்கியதுதான் ஆட்டத்தை இந்திய அணியின் பக்கம் சாதகமாகத் திருப்பியது.

இதனையடுத்து வாசிம் அக்ரம், பேட்டிங்கில் ரன் மெஷின் உண்டு. ஆனால் பவுலிங்கில் இருக்கும் ரன் மெஷின் ஹாரிஸ் ராவுஃப்தான் என்று கிண்டலாகச் சாடியுள்ளார். இது தொடர்பாக வாசிம் அக்ரம் கூறியதாவது:

ஹாரிஸ் ராவுஃப் துரதிர்ஷ்டவசமாக ஒரு ரன் மெஷின்... பவுலராக. குறிப்பாக இந்தியாவுக்கு எதிராக. நான் அவரை கிண்டலோ விமர்சனமோ செய்யவில்லை, ஒட்டுமொத்த நாடுமே அவரை விமர்சித்து வருகின்றது.

அவர் டெஸ்ட் போட்டிகளில் ஆடாமல் ஒருநாளும் அவரால் முன்னேற முடியாது. டெஸ்ட்டில் ஆடாமல் அவரால் நன்றாக ஆடவே முடியாது. சிகப்புப் பந்திலேயே ஆட மாட்டேன் என்னும் வீரர் அணிக்குத் தேவையில்லை. எனவே பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் அவரிடம் கூற வேண்டும், “ரெட் பால் கிரிக்கெட் ஆட மாட்டீர்களா? அப்புறம் நன்றி கிளம்புங்கள்” என்று கூறிவிட வேண்டும்.

குறைந்தது 45 முதல் தர கிரிக்கெட் போட்டிகளிலாவது ஆடுங்கள். உங்கள் லெந்த் மேம்படும். அதுவும் ராவுஃப்பின் ரன் அப் நன்றாகவே இல்லை, சரளமான ரன் அப் இல்லை அது. கடந்த 45 ஆண்டுகளில் அவர் ஏன் இன்னும் தன் ரன் அப்பை சரி செய்யவில்லை என்று நான் வக்கார் யூனிஸிடம் கேட்டேன். வக்கார் யூனிஸும் இதே காரணத்தைத்தான் சொன்னார், அதாவது ராவுஃப் ரெட் பால் கிரிக்கெட் ஆடுவதில்லை என்று.

வாழ்த்துக்கள் இந்தியா 7க்கு 7 வெற்றி. இந்திய அணிதான் தகுதியான சாம்பியன்கள். இங்கு பெரிதாக வென்று விட்டனர். “ என்றார் வாசிம் அக்ரம்.

# டிராபி, பதக்கம் வழங்கப்படாத நிலையிலும் வெற்றியை கொண்டாடிய இந்திய அணி முழு விவரம்



ஆசிய கோப்பை டி 20 கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டியில் நேற்று முன்தினம் இந்திய அணி 5 விக்கெட்கள் வித்தியாசத்தில் பாகிஸ்தானை வீழ்த்தி 9வது முறையாக சாம்பியன் பட்டம் வென்றது. போட்டி முடிந்தவுடன் பாகிஸ்தான் வீரர்கள் ஓய்வறைக்குத் திரும்பினர். இந்திய வீரர்கள் பரிசளிப்பு நிகழ்ச்சிக்காக மைதானத்திலேயே இருந்தனர். சுமார் 90 நிமிடங்கள் கழித்தே பரிசளிப்புக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இந்திய வீரர்கள் சிலரின் குடும்பத்தினரும் வந்திருந்தனர். கேப்டன் சூர்யகுமார் யாதவின் மனைவி தேவிஷா, தலைமை பயிற்சியாளர் கவுதம் கம்பீரின் மனைவி மற்றும் மகள்கள் மைதானத்தில் இருந்தனர், அனைவரும் நல்ல உற்சாகத்தில் இருந்தனர். அதேவேளையில் ஓய்வறை சென்ற பாகிஸ்தான் அணி வீரர்கள் சுமார் ஒரு மணி நேரத்துக்கு பின்னரே மைதானத்துக்குள் வந்தனர்.

ஆட்ட நாயகன் விருதை வென்ற திலக் வர்மாவும், தொடர் நாயகன் விருதை வென்ற அபிஷேக் சர்மாவும் மேடையில் இருந்த பிற விருந்தினர்களிடம் அதனை பெற்றுக்கொண்டனர். இந்திய வீரர்கள் பதக்கங்களைப் பெற்ற போது மேடையில் இருந்த பாகிஸ்தான் உள்துறை அமைச்சரும், ஆசிய கிரிக்கெட் கவுன்சில் தலைவருமான மோஷின் நக்வியை கண்டு கொள்ளவில்லை, அவரும் இந்திய வீரர்கள் பரிசுகளை வாங்க வரும்போது கைதட்டவில்லை. தோல்வியடைந்த பாகிஸ்தான் அணியினர் வங்கதேச கிரிக்கெட் வாரியத் தலைவர் அமினுல் இஸ்லாம் புல்புலிடமிருந்து பரிசுகளைப் பெற்றனர். தொடர்ந்து மோஷின் நக்வி 2வது இடம் பிடித்ததற்கான காசோலையை பாகிஸ்தான் கேப்டன் சல்மான் அலி ஆகாவிடம் வழங்கினார். இதைத் தொடர்ந்து இந்திய அணிக்கு பதக்கம் மற்றும் கோப்பை வழங்கப்பட இருந்தது. இதை மோஷின் நக்வி வழங்குவதாக இருந்தது. ஆனால் இந்திய அணி, மோஷின் நக்வியிடம் இருந்து டிராபியை பெறமாட்டோம் என தெரிவித்தது. இதனால் பரிசளிப்பு விழா மேடையில் பரபரப்பு நிலவியது. மோஷின் நக்வியைத் தவிர மேடையில் இருந்த வேறு யாரிடமிருந்தும் கோப்பையைப் பெற இந்திய அணி தயாராக இருந்தது. இதனால் மேடையில் இருந்த துபாய் ஸ்போர்ட்ஸ் சிட்டி காலித் அல் ஜரூனி, இந்தியாவுக்கு ஆசியக் கோப்பையை வழங்குவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் மோஷின் நக்வி அதற்கு இணங்கவில்லை. இதையடுத்து பரிசளிப்பு நிகழ்ச்சியின் தொகுப்பாளர் சைமன் டவுல், “இந்திய அணி தங்கள் பதக்கங்களையும் விருதுகளையும் இன்று இரவு பெறப்போவதில்லை’ என்று அறிவித்ததோடு, பரிசளிப்பு நிகழ்ச்சி முடிந்தது” என்றார். இதைத் தொடர்ந்து மோஷின் நக்வி மேடையில் இருந்து இறங்கி மைதானத்தின் வெளியேறும் வாயிலை நோக்கி நடந்தார். உடனடியாக, போட்டி அமைப்பாளர்கள் அனைவரையும் ஆச்சரியப்படுத்தும் விதமாக,கோப்பையை விழா மேடையில் இருந்து எடுத்துச் சென்றனர். இதனால் அனைவரும் அதிர்ச்சியடைந்தனர். இதையடுத்து இந்திய அணி வீரர்கள், பயிற்சியாளர்கள், துணை ஊழியர்களுடன், விழா மேடைக்கு அருகில் கூடி சிறிது நேரம் கொண்டாடினர். கேப்டன் சூர்யகுமார் யாதவ் கற்பனையாக கையில் கோப்பையை ஏந்தி வந்து சக அணி வீரர்களிடம் வழங்குவது போன்று பாவனை செய்ய கொண்டாட்டம் அரங்கேறியது. வெற்றிக் கோப்பை இல்லாத போதிலும் குழு புகைப்பட அமர்வையும் நடத்தினர். உண்மையான டிராபி எது? பரிசளிப்பு விழா முடிந்த பிறகு இந்திய அணியின் கேப்டன் சூர்யகுமார் யாதவ் கூறும்போது, "நான் கிரிக்கெட் விளையாட, கிரிக்கெட்டை பின்தொடர தொடங்கியதில் இருந்து வெற்றிபெற்ற ஒரு அணிக்கு கோப்பை மறுக்கப்படுவதை இப்போதுதான் முதல்முறையாக பார்க்கிறேன். என்னுடைய கோப்பைகள் (வீரர்கள்) ஓய்வறையில் அமர்ந்துள்ளனர். அணி வீரர்கள் 14 பேரும், பயிற்சியாளர்கள், உதவியாளர்கள்தான் இந்தத் தொடரில் உண்மையான வெற்றிக் கோப்பைகள்" என்றார். ரூ.21 கோடி பரிசு: ஆசிய கோப்பை கிரிக்கெட் தொடரில் சாம்பியன் பட்டம் வென்ற இந்திய அணி மற்றும் பயிற்சியாளர்களுக்கு ரூ.21 கோடி பரிசுத் தொகை வழங்கப்படும் என பிசிசிஐ அறிவித்துள்ளது. பிசிசிஐ தனது எக்ஸ் வலைதள பதிவில், “மூன்று அடிகள், ஜீரோ பதில். ஆசிய கோப்பை சாம்பியன்கள் மற்றும் பயிற்சியாளர்கள் குழுவுக்கு ரூ.21 கோடி பரிசுத் தொகை” என தெரிவிக்கப்பட்டுள்ளது. ரூ.28 லட்சம் நன்கொடை: இந்திய அணியின் கேப்டனான சூர்யகுமார் யாதவ் தனது எக்ஸ் வலைதள பதிவில், “ஆசிய கோப்பை தொடரின் சம்பளத்தை பஹல்காம் தாக்குதலில் உயிரிழந்தோரின் குடும்பத்துக்கும், இந்திய ராணுவத்துக்கும் நன்கொடையாக வழங்க முடிவு செய்துள்ளேன்'' எனத் தெரிவித்துள்ளார். இந்திய வீரர்கள்சர்வதேச டி 20ல் ஒரு போட்டிக்கு ரூ.4 லட்சம் ஊதியமாக பெறுகிறார்கள். இந்த வகையில் ஆசிய கோப்பையில் விளையாடிய ஏழு ஆட்டங்களுக்கு மொத்தம் ரூ.28 லட்சத்தை சூர்யகுமார் யாதவ் நன்கொடையாக அளிப்பார். தேவஜித் சைகியா சொல்வது என்ன? பிசிசிஐ செயலாளர் தேவஜித் சைகியா கூறும்போது, “டிராபியை ஆசிய கிரிக்கெட் கவுன்சில் தலைவரிடம் இருந்து பெறுவதில்லை என்று முடிவு செய்திருந்தோம். அவர், பாகிஸ்தானில் உள்ள முக்கிய தலைவர்களில் ஒருவர். ஆனால் அதற்காக அவர், பதக்கங்களுடன் கோப்பையையும் எடுத்துச் சென்றிருக்கக்கூடாது. இது மிகவும் துரதிர்ஷ்டவசமானது. கோப்பையும் பதக்கங்களும் விரைவில் இந்தியாவுக்குத் திருப்பித் தரப்படும் என்று நம்புகிறோம்.வரும் நவம்பரில் துபாயில் ஐசிசி கூட்டம் நடைபெறுகிறது. இதில் மோஷின் நக்விக்கு எதிராக வலுவான எதிர்ப்பை பதிவு செய்வோம்” என்றார். ‘அவமரியாதை’ பாகிஸ்தான் கேப்டன் சல்மான் அலி ஆகா கூறும்போது,“இந்தத் தொடரில் இந்திய அணி நடந்துகொண்ட விதம் ஏமாற்றமளிக்கிறது. இந்திய அணியினர் கைகுலுக்க மறுத்தது எங்களுக்கு அவமரியாதை அல்ல. அது கிரிக்கெட்டுக்கு அவர்கள் செய்த அவமரியாதை ஆகும். வெளியில் இருந்து வந்த உத்தரவின்படி சூர்யகுமார் யாதவ் நடந்து கொள்கிறார்” என்றார்.





## அரிமண்டபம் இராஜாக்கள் குடியிருப்பு சுந்தரவள்ளி அய்யனார் கோவில் முளைப்பாரி உற்சவ விழா

மானாமதுரை, அக்.03-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை மேலப்பசலை பஞ்சாயத்திற்கு உட்பட்ட அரிமண்டபம் இராஜாக்கள் குடியிருப்பு சுந்தரவள்ளி அய்யனார் கோவிலில் முளைப்பாரி உற்சவ விழா கிராமத்தில் ஆண்டுதோறும் மக்களின் குறைகள் தீரவும் விவசாயம் செழிக்கவும் மழை வேண்டி ஏழு நாட்களுக்கு முன்பு செவ்வாய் முளைப்பாரி காப்பு கட்டி விரதம் இருந்து முளைப்பாரி ஓடுகளில் நவதானியங்களை விதைத்து நன்றாக முளைத்தவுடன் கோயில் முன்பாக வைத்து ஏழு நாட்களாகும் கும்மி பாட்டு ஒயிலாட்டம் என கொண்டாடி மகிழ்கின்றனர் இதனைத் தொடர்ந்து கிராம பொதுமக்கள் ஏழு நாளும் விரதம் இருந்து செவ்வாய் இரவு தெய்வத்திற்கு உணவுகளும் பரிமாறி சுந்தரவல்லி அய்யனார் கோவிலில் பெண்கள் அனைவரும் கோவிலுக்கு மூன்று முதல் ஏழு வரை ஒன்பது சட்டி வரை சட்டி சோறு எடுத்து சுந்தரவல்லி அய்யனார் கோயில் முன்பு படையல் வைத்து வணங்கி வருகின்றனர் இதனைத் தொடர்ந்து புதன்கிழமை அன்று முளைப்பாரி ஓடுகளை சிறியவர் முதல் பெரியவரை பெண்கள் அனைவரும் தலையில் முளைப்பாரி ஓடுகளை தூக்கி விவசாயத்திற்கு சொந்தமான கண்மாயில் கண்மாயில் முளைப்பாரி ஓடுகளை கம்மா தண்ணியில் முக்கியப்படி சூரிய பகவானை வழங்கும் திசையை நோக்கி கும்பிட்டு நேர்த்திக்கடனை செலுத்தி பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.




## பூவந்தி ஆதிதிராவிடர்களுக்கு இலவச மனைகளை அளவீடு செய்துதர வேண்டி ஆர்ப்பாட்டம்

பூவந்தி, அக்.03-

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் வட்டம் பூவந்தி கிராமத்தில் கடந்த 27 ஆண்டுகளுக்கு தமிழ்நாடு அரசு முன்னதாக 142 ஆதிதிராவிட பட்டியல் இன மக்களுக்கென ஒதுக்கித் தந்திட்ட புல எண் 56 ல் 1 சி இடத்தை தலா 3 சென்ட் வீதம் அளவீடு செய்து ஒதுக்கித் தருமாறு ஆர்ப்பாட்டம் நடத்தினர்...

மார்க்சீய கம்யூனிஸ்ட் கட்சி நிர்வாகிகள் மற்றும் கிராம ஆதிதிராவிடர் பட்டியல் இன மக்கள் சுமார் நூற்றுக்கும் மேற்பட்டோர் சுமார் இரண்டு கிலோ மீட்டர் தூரத்திற்கு பேரணியாக சென்று மாவட்ட நிர்வாகத்திற்கு தங்களது கோரிக்கைகளை தெரிவித்தனர். இந்த பேரணியின் போது மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தீண்டாமை ஒழிப்பு முன்னணி மாவட்ட செயலாளர் கருப்புச்சாமி , மாவட்ட தலைவர் முத்துராமலிங்கபூபதி , மாவட்ட செயற்குழு அய்யம் பாண்டி, ஊராட்சி மேனாள் தலைவர் மகாலிங்கம், பொருளாளர் வீரையா, மாவட்ட செயலாளர் சக்திவேல், தன்னார்வலர் ஃபிடல் காஸ்ட்ரோ என்ற பூவந்தி சரவணன் உள்ளிட்ட கிராமப் பொது மக்கள் ஒன்றி ணைந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.




## வேலூரில், காங்கிரஸ் அலுவலகத்தில் மகாத்மா காந்தி பிறந்தநாள் மற்றும் பெருந்தலைவர் காமராஜர் நினைவு தினம் அனுசரிப்பு

வேலூர், அக்.03-

வேலூர் மாவட்டம், வேலூர், அண்ணா சாலை, வேலூர் மாவட்ட காங்கிரஸ் அலுவலகத்தில் மகாத்மா காந்தி பிறந்தநாள், மற்றும் முன்னாள் தமிழக முதல்வர் பெருந்தலைவர் காமராஜர் நினைவு தினம் அனுசரிப்பு முன்னிட்டு மாநகர மாவட்ட காங்கிரஸ் சார்பில் மகாத்மா காந்தி மற்றும் பெருந்தலைவர் காமராஜர் ஆகியோரின் திருவுருவப்படத்திற்கு மாநகர மாவட்டத் தலைவர் பி,டிக்காராமன், மலர் மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்ச்சியில் முன்னாள் ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் சி.கே.தேவேந்திரன், முன்னாள் நகர மன்ற உறுப்பினர்கள் பி.பி.சந்திர பிரகாஷ் பி.பி.ஜெயபிரகாஷ், மாவட்ட சிறுபான்மை துறை தலைவர் வாஹித் பாஷா, மண்டல தலைவர்கள் ஐ,பி. ரகு, வி,கே.மனோகரன், ஓல்டுடவுன் ஆனந்த், ஹரி கிருஷ்ணன், மகளிர் அணி காஞ்சனா, உள்ளிட்ட இந்திய தேசிய காங்கிரஸ் மாவட்ட ஒன்றிய நிர்வாகிகள் உறுப்பினர்கள் என பலர் கலந்து மரியாதை செலுத்தினர்.





## நாட்டு நலப்பணித் திட்ட முகாமில் டிஜிட்டல் உலகமும் இன்றைய மாணாக்கரும் தலைப்பில் கருத்தரங்கம்

சிவகங்கை, அக்.03-

சிவகங்கை மாவட்டம் நாட்டரசன்கோட்டையில் கானாடுகாத்தான் முத்தையா சுப்பையா செட்டியார் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் நாட்டு நலப்பணித் திட்ட முகாம் நடைபெற்று வருகிறது. ஆறாவது நாள் விழாவாக பள்ளிவளாகம் சுத்தம் செய்தல் மற்றும் மண்வளமும் மரம் வளர்ப்பும் தலைப்பில் விழிப்புணர்வு பேரணியும் நடைபெற்றது. பள்ளியின் சரோஜா நினைவரங்கத்தில் டிஜிட்டல் உலகமும் இன்றைய மாணாக்கரும் என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது. பள்ளியின் பொறுப்பு தலைமை ஆசிரியை ஆரோக்கிய ஸ்டெல்லா தலைமை வகித்தார். நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர் லதா நாட்டு நலப்பணித்திட்ட உதவி அலுவலர் சகாயமேரி முன்னிலை வகித்தனர். தமிழ்த்தாய் வாழ்த்து பள்ளிப் பாடலுடன் விழா தொடங்கியது. நாட்டு நலப்பணித்திட்ட மாணவி வைத்தீஸ்வரி வரவேற்புரை ஆற்றினார். மரம் வளர்ப்போம். மழை பெறுவோம் குறித்த விழிப்புணர்வு நாடகத்தை மாணவிகள் நடித்து காட்டினர். தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்டச் செயலாளர் ஆரோக்கியசாமி டிஜிட்டல் உலகமும் இன்றைய மாணாக்கரும் என்ற தலைப்பில் கரோனா வைரஸ் என்ற நிஜ உலக பூதமானது மாணவர்களின் நண்பனாக டிஜிட்டல் தொழில்நுட்பத்தை மாற்றி உள்ளது என்றும் அனைத்து மாணவர்களும் தங்கள் கற்பனையைத் தாண்டி கற்றலிலும் வாழ்க்கையிலும் செழிக்க அவர்களை தயார்படுத்தும் உருமாறும் கற்றல் அனுபவங்களில் ஈடுபட வேண்டும் என்றும் டிஜிட்டல் உலகில் ஒவ்வொரு மாணாக்கரும் அதிகாரம் பெற்ற கற்றவராக டிஜிட்டல் குடிமகனாக அறிவு கட்டமைப்பாளராக புதுமையான வடிவமைப்பாளராக கணக்கீட்டு சிந்தனையாளராக படைப்பு தொடர்பாளராக உலகளாவிய கூட்டு பண்பாளராக திகழ வேண்டும் என்று கருத்துரையாற்றினார். தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை கிளைத் தலைவர் மணவாளன் வானவில் மன்ற கருத்தாளர்கள் ஜெயப்பிரியா நீலாயதாட்சி தையல் ஆசிரியை ராணி வாழ்த்துரை வழங்கினர். அறிவியலில் வினாக்கள் கேட்கப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டது. அனைவருக்கும் விஞ்ஞான துளிர் அறிவியல் மாத இதழ் வழங்கப்பட்டது. நாட்டு நலப்பணித்திட்ட மாணவி சுவேதா நன்றியுரை ஆற்றினர். நாட்டு நலப்பணித்திட்ட மாணவி சுபஸ்ரீ நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார். நாட்டுப்பண் இசைக்க விழா நிறைவு பெற்றது.




## ஊராட்சி பகுதிகளில் கண்காணிப்பு கேமரா அமைக்கும் ஆர் எஸ் மங்கலம் யூனியன் அதிகாரிகளுக்கு பொதுமக்கள் பாராட்டு.

ஆர்எஸ்மங்கலம். அக்.03-

இராமநாதபுரம் மாவட்டம் ஆர் எஸ் மங்கலம் தாலுகா ஆர் எஸ் மங்கலம் யூனியனுக்கு உட்பட்ட ஊராட்சி சேவை மையங்களில் குற்றச்செயல்களை தடுக்கும் வகையில் கண்காணிப்பு கேமரா அமைத்து வரும் யூனியன் அதிகாரிகள்.

ஆர் எஸ் மங்கலம் வட்டார வளர்ச்சி அலுவலராக கிருஷ்ணன் பொறுப்பேற்ற பின் மக்களுக்கு தேவையான தொலைநோக்கு திட்டம் மற்றும் அடிப்படை வசதிகளை கண்டறிந்து நிதி ஒதுக்கீடு செய்து பணிகளை மேற்கொண்டு வருவதால் யூனியன் தொடர்ந்து வளர்ச்சி பாதையில் பயணிப்பது குறிப்பிடத்தக்கது.

இதனை தொடர்ந்து ஆர் எஸ் மங்கலம் யூனியனுக்கு உட்பட்ட பகுதியில் உள்ள 35ஊராட்சிகளில் நடைபெறும் குற்றச்செயல்களை தடுக்கும் விதமாக மாவட்ட ஆட்சியர் சிம்ரன் ஜீத் சிங் காலோன் உத்தரவின் பேரிலும் உதவி இயக்குனர் பத்மநாபன் ஆலோசனையின் பேரில் வட்டார வளர்ச்சி அலுவலர் கிராம ஊராட்சி லிங்கம் அனைத்து ஊராட்சி சேவை மைய கட்டிடங்களிலும் கண்காணிப்பு கேமரா அமைக்கும் பணியை மேற்கொண்டு வருவது பொதுமக்களிடையே வரவேற்பையும் பாராட்டையும் பெற்றுள்ளது.

ஊராட்சிக்கு உட்பட்ட கிராம புறங்களில் ஆங்காங்கே குற்றச்செயல்களில் ஈடுபட்டு வரும் சமூக விரோதிகள் காவல் துறையினர் பிடியில் இருந்து எளிதாக தப்பித்து வந்த நிலையில் யூனியன் அதிகாரிகளின் முயற்சியால் கண்காணிப்பு கேமரா அமைப்பதன் மூலம் கிராம புறங்களில் சமூக விரோத செயல்களில் ஈடுபட்டு வரும் குற்றவாளிகளை கண்டறியும் சூழல் ஏற்பட்டுள்ளதுடன் குற்றச்சம்பவங்கள் குறைய வாய்ப்பு உள்ளதால் ஆர் எஸ் மங்கலம் யூனியன் அதிகாரிகளின் இந்த முயற்சிக்கு பொதுமக்கள் பாராட்டு தெரிவித்து வருகின்றனர்.





## சத்துவாச்சாரி, வள்ளலாரில் ஐஸ்பே என்ற புதிய ஐஸ் ஏ.சி.ஷோரூம் திறப்பு விழா

### புதுச்சேரி, காரைக்கால் எம்.எல்.ஏ. பி.ஆர்.சிவா பங்கேற்று திறந்து வைப்பு

வேலூர், அக்.03-

வேலூர் மாவட்டம், வேலூர், சத்துவாச்சாரி வள்ளலாரில் ஐஸ்பே என்ற புதிய ஐஸ் ஏ.சி.ஷோரூம் திறப்பு விழா, ஐஸ்பே உரிமையாளர் பாபு தலைமையில் நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக புதுச்சேரி என்,ஆர், காங்கிரஸ், முன்னாள் அமைச்சரும், காரைக்கால் சட்டமன்ற உறுப்பினருமான பி,ஆர்,சிவா கலந்து கொண்டு ரிப்பன் வெட்டி கடையை திறந்து வைத்து, குத்துவிளக்கேற்றி முதல் விற்பனையை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் கடை உரிமையாளரும் புதுச்சேரி என்,ஆர் காங்கிரஸ் நிர்வாகியுமான தொழிலதிபர் பரத், பாபு மற்றும் குடும்ப த்தினர் கலந்து கொண்டு சிறப்பி த்தனர். இந்நிகழ்ச்சியில் வாடிக்கையாளர்கள் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டு தரமான ஐஸ் உணவு வகைகள் மற்றும் மலிவான விலையில் ஐஸ் கிடைப்பதால் மகிழ்ச்சியுடன் ஐஸ் சாப்பிட்டு மகிழ்ந்தனர்.





## வேலூர் அடுத்த சத்துவாச்சாரியில் சன்பீம் கிட்ஸ் காஸ்டல் குழந்தைகளுக்கான பள்ளி திறப்பு விழா

வேலூர், அக்.03-

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, சத்துவாச்சாரியில், சன்பீம் கிட்ஸ் காஸ்டல் குழந்தைகள் பள்ளி திறப்பு விழாஅகடமிக் இயக்குனர் சுரேகா வரவேற்புரையாற்றுகையில், சங்கீதா மற்றும் அதித்தி தமிழ்த்தாய் வாழ்த்து பாடலுடன், சிறப்பு அழைப்பாளர்களை அறிமுகப்படுத்தி இத்திறப்பு விழா நடைபெற்றது. சிறப்பு அழைப்பாளர்களாக ஏ.எஸ்.ஏ. மருத்துவ மனையின் இயக்குனர் டாக்டர். சக்கரபாணி கலந்து கொண்டு ரிப்பன் வெட்டி, திறந்து வைத்து குத்து விளக்கேற்றி பள்ளியை பார்வையிட்டனர். இதனைத் தொடர்ந்து இனிப்புகள் வழங்கப்பட்டு, சிறப்பு அழைப்பாளர்களை கௌரவித்தனர். இந்நிகழ்ச்சியில் சன்பீம் பள்ளிகளின் தலைவர் ஹரிகோபாலன், பள்ளி முதல்வர் ரத்தீஷ், அகடமிக் இயக்குனர் சுரேகா, சன்பீம் பள்ளி குழும அலுவலர்கள் பணியாளர்கள் கலந்து கொண்டனர். மேலும், சிறப்பு விருந்தினர்களாக குழந்தைகள், பெற்றோர்கள், பகுதி மக்கள் என பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இறுதியில் சன்பீம் பள்ளி அலுவலர் சிறில் ராபின்சன் நன்றியுரையாற்றி விழா நிறைவுபெற்றது.

## மானாமதுரை பாபா மெட்ரிக் பள்ளியில் விஜயதசமி விழா

சிவகங்கை, அக்.03-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் பாபா மெட்ரிக் பள்ளியில் விஜயதசமியை முன்னிட்டு மாணவர்களின் கல்வித் திறன் மேம்படசிறப்பு பூஜை நடைபெற்றது. இதில் பள்ளியின் நிறுவனர் ராஜேஸ்வரி அம்மா தாளாளர் ஆர்.கபிலன் நிர்வாகி மீனாட்சி முதல்வர் சாரதா பள்ளியின் ஆசிரியர்கள் மற்றும் மாணவ மாணவிகள் அனைவரும் கலந்து கொண்டனர். நமது பள்ளியில் பயிலும் பத்தாம் வகுப்பு மாணவ மாணவிகளுக்கு நிறுவனர் ராஜேஸ்வரி அம்மா தலைமையில் பள்ளியின் தாளாளர் நிறுவனர் முதல்வர் ஆசிரியர்கள் அனைவராலும் ஆசி வழங்கப்பட்டது. இதைத் தொடர்ந்து விஜயதசமி அட்மிஷன் நடைபெற்றது. இதில் சேர்க்கை பெற்ற குழந்தைகளுக்கு பள்ளியின் தாளாளர் கபிலன் மற்றும் நிர்வாகி மீனாட்சி அவர்களால் வித்யாரம்பமாகிய அரிசியில் “அ” என்ற எழுத்து எழுதுதல் மற்றும் தேன் வழங்குதல் நடைபெற்று குழந்தைகளுக்கு “விஜயதசமி நல்வாழ்த்



துக்கள் வருக கல்வி வளம் பெறுக” என்ற வாசகம் எழுதிய சில்வர் தட்டு பரிசாக வழங்கப்பட்டது.

அதன் பிறகு மாலை 3 மணி அளவில் மாறுவேட போட்டி நடைபெற்றது. சரஸ்வதி வேடம் அணிந்த அனைத்து குழந்தைகளும் மலர்கள் தூவி வரவேற்கப்பட்டனர். இப்போட்டியில் முதல் பரிசு கனிஷ்கா சாருமதி,இரண்டாவது பரிசு பிரனிதா, மூன்றாவது பரிசு .பிரசித்தா இவர்கள் அனைவருக்கும் பள்ளியின் தாளாளர் மற்றும் நிர்வாகி பரிசுகளை வழங்கினார். போட்டியில் கலந்து கொண்ட அனைத்து குழந்தைகளுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டது.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161